# இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்

# வேலைவாய்ப்பு அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்க்காணும் விபரப்படியான காலி பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்வதற்கு உரிய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.23.02.2022 மாலை 5.00 மணி முடிய. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி – இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம் நகர் மற்றும் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் – 623 526.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிட எண்ணிக்கை | சம்பள விகிதம் ரூ | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1 | தட்டச்சர் | 2 | Level -22<br>18500-58600 | (1) A pass in SSLC or its equivalent qualification recognized by the Government; and<br>(2)A pass in the Government Technical Examination in Typewriting:<br>(i) Higher Grade in Tamil and English (or)<br>(ii) Higher Grade in Tamil and Lower Grade in English (or)<br>(iii) Higher Grade in English and Lower Grade in Tamil.<br>Provided that if the candidates with qualifications referred in item (i) are not available, candidates with the qualifications referred to in item (ii) or (iii)in the order of preference above may be appointed/<br>(3)A pass in the Certificate Course in Computer Application and Office Automation or equivalent recognized by the Government. |
| 2 | டிக்கெட் விற்பனையாளர் | 10 | Level -22<br>18500-58600 | A pass in SSLC or its equivalent qualification recognized by the Government |
| 3 | காவலர் | 24 | Level -17<br>15900-50400 | தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் |
| 4 | தூர்வை | 20 | Level -10<br>10000-31500 | தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் |
| 5 | துப்புரவுப்பணியாளர் | 10 | Level -10<br>10000-31500 | தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் |

## நிபந்தனைகள்

1) விண்ணப்பதாரர் 01.02.2022 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2) இந்து மதத்தை சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3) ஒன்றுக்கு மேற்பட்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக எழுத்துத் தேர்வு / நேர்முகத் தேர்வு நடத்தப்படும்.
4) இத்திருக்கோயில் ஆகம விதிகளின்படியும், நடைமுறை பழக்கவழக்கத்தின் அடிப்படையிலும் பணிநியமனம் செய்யப்படும்.
5) விளம்பர அறிவிப்பு வரிசைஎண்.5 உள்ள பணியிடங்களுக்கு ஆண்கள் –5, பெண்கள் – 5 என பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
6) பல பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.
7) விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
8) விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்கு சான்றிட்ட நகல் மட்டுமே அனுப்பப்படவேண்டும். அசல் சான்றிதழை எக்காரணம் கொண்டும் அனுப்பக்கூடாது.

9) ராஜஉகத்தாலும் தெய்வீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

10) விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

11) விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது பதவியின் பெயரை குறிப்பிட்டு பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

12) நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.

13) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்கு பின்னர் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படமாட்டாது.

14) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் ஒப்புதல் அட்டையுடன் மட்டுமே அனுப்ப வேண்டும்.

15) தொற்றுநோய் உடல் மற்றும் மனநிலை குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

16) திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் அரசு பணி மற்றும் பொது ஸ்தாபனங்களிலிருந்தும், இதர திருக்கோயில்களிலிருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

17) திருக்கோயில் நிர்வாக நலனுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், போராட்டம், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

18) பணிநியமனம் அரசாணை எண்.114 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்.03.09.2020 விதிகளுக்குட்பட்டது.

19) நேரடிநியமனம் இந்துசமயஅறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டவை.

20) இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும், 23.02.2022 தேதி மாலை 5.00 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

21) தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

22) விண்ணப்பங்களுக்கு கட்டணம் கிடையாது. விண்ணப்பங்களை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நேரிலோ அல்லது <u>rameswaramramanathar.hrce.tn.gov.in</u> என்கிற இணையதள முகவரியில் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், பெயரில் உள்ள பக்கத்தில் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

23) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
இணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்
இராமேசுவரம் – 623 526, இராமநாதபுரம் மாவட்டம்

ராஜா நா.குமரன் சேதுபதி
தக்கார்

நா.பழனிக்குமார், பி.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்

| புகைப்படம் |
|---|
| |

**அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்**

**ந.க.எண்.2432/2021/அ2 நாள்.24.01.2022**

**விண்ணப்பப்படிவம்**

**விண்ணப்பிக்கும் பணியிடத்திற்கான பெயர் :** ...............................................................................

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் (முழுப்பெயர்) | : | |
| 2 | தந்தை / கணவர்/ பாதுகாவலர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி / வயது (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 4 | பாலினம் (ஆண் / பெண்) | : | |
| 5 | நிலையான முகவரி (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 6 | 12 இலக்க ஆதார் அட்டை எண் குறிப்பிடவும் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7 | சாதி மற்றும் மதம் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | | |
| 8 | விண்ணப்பதாரர்கள் 01.02.2022 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். | : | |
| 9 | கல்வித்தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 10 | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் அதன் விபரம் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 11 | விண்ணப்பிக்கும் பணியில் முன் அனுபவம் இருப்பின் அதன் விபரம் பிற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 12 | இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர் எனில் அதன் விபரம்<br>அ) பெயர் | : | |
| | ஆ)தந்தை / கணவர் பெயர் | : | |
| | இ) பதவி | : | |
| | ஈ)பணியில் சேர்ந்த நாள் | : | |
| | உ)பணிபுரியும் திருக்கோயில் | : | |
| | ஊ)பணிபுரிந்து வருவதற்கான சான்று | : | |
| | எ) நன்னடத்தைச் சான்று | : | |

| | | | |
|---|---|---|---|
| 13 | அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமிருந்து 24.01.2022–க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தை சான்று இணைக்கப்பட வேண்டும். | | |
| 14 | நன்னடத்தைச் சான்று<br>இறுதியாக பயின்ற பள்ளி/ கல்லூரியில் பெறப்பட்ட சான்று நகல் | : | |
| 15 | குற்றவியல் நடவடிக்கை இருப்பின் அதன் விபரம்<br>அ) பதிவு செய்யப்பட்டுள்ளதா?<br>ஆ) நிலுவையிலுள்ளதா?<br>இ) தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? | : | ஆம் / இல்லை<br>ஆம் / இல்லை<br>ஆம் / இல்லை |
| 16 | தொலைபேசி எண் | : | |
| 17 | கைபேசி எண் | : | |
| 18 | மின்னஞ்சல் முகவரி | : | |

## <u>உறுதிமொழி</u>

______________________ தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் ______________________ ஆகிய நான், இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் அனைத்து தகவல்களும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் சரியானவை என உறுதி கூறுகின்றேன். எதிர்காலத்தில் மேற்படி தகவல்கள் தவறானவை எனவும், இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனவும் தெரியவந்தால், என்மீது திருக்கோயில் நிர்வாகத்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யவும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படவும் சம்மதித்து உறுதி அளிக்கிறேன்.

நாள் : விண்ணப்பதாரர் கையொப்பம்

இடம் :